IJCRT.ORG ISSN : 2320-2882

INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS (IJCRT)

An International Open Access, Peer-reviewed, Refereed Journal

# தமிழ்ச்செல்வி புதினங்களில் பாத்திரப்படைப்புகள்

**நெறியாளர்**
**முனைவர் அரங்க. அன்பில்நாதன்**
இணைப்பேராசிரியர்
தமிழியல்துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

**ஞா. தங்கமணி**
முனைவர்பட்ட ஆய்வாளர்
தமிழியல்துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

**முன்னுரை**

காப்பியம், நாடகம், புதினம் ஆகிய இலக்கியங்களுக்கு முதன்மையான உறுப்பு ‘பாத்திரங்கள்’ எனப்படும் கதை மாந்தர். புதினங்கள் சமுதாயத்தைப்பிரதிபலித்துக் காட்டுகின்றன. சமுதாயத்தில் வாழும் மனிதர்களே புதினங்களில் பாத்திரங்களாக உருவெடுக்கின்றனர். அப்பாத்திரங்களை நாவல் ஆசிரியர்கள் தன் விருப்பப்படி மெருகூட்டி அமைக்கின்றனர்.

தான் பார்த்த மாந்தாகளையும், அவாதம் அனுபவங்களையும் உள்ளதை உள்ளவாறு கூறவும் பாத்திரங்களைத் தோவதுண்டு. சு.தமிழ்ச்செல்வி தாம் படைத்த நாவல்களில் தம் தனித்தன்மையைப் பாத்திரப்படைப்பின் மூலம் புலப்படுத்தியிருப்பதை விளக்கிக் காட்டும் முறையில் இவ்வாய்வுக்கட்டுரை ஆராய்கிறது.

**புதினத்தில் பாத்திரப்படைப்பின் இன்றியமையாமை**

கதை, ககதைக்திட்டம், கருத்து, பாத்திரங்கள், நிகழ்ச்சி, களம் எனப்பல கூறுகள் நாவல்களில் இடம் பெற்றாலும் பாத்திரப்படைப்பு அவற்றுள் முக்கியமான ஒன்றாகும். ஒரு புதினத்தின் வெற்றிக்கு அதில் வரும் பாத்திரப்படைப்பு என்பது முதன்மையான காரணியாகும். புதினக்கதைக் கருவினும் பாத்திரப்படைப்பு மேலானது என்பா. “ஒரு புதினத்திற்குக் கரு (ீடழவ) இன்றியமையாததேனு ஆயின் அது கதையின் எலும்பே (ளுமநடநவழெ) ஆகும். கருவினும் சிறப்பு வாய்ந்த ஒன்று உண்டு. அதுவே பாத்திரம் ஆகும்”[1] என்று மேரன் எல்வுட் தெரிவிப்பதாக இரா. மோகன் கூறுவார். வால்டர் ஆலன், “ஒரு புதினத்தின் முழுமையான இன்றியமையாததும் முதன்மையானதும், பாத்திரப்படைப்பேயாகும்”[2] என்பர். பாத்திரம் சிறப்பாக அமைந்தால்தான் கதைக்கரு அழுத்தம் பெறும். கதை உறுப்பினரில்லாமல் கதை இயங்காது. ஆதலின் புதினங்களுக்கு பாத்திரப்படைப்பு இன்றியமையாததாகும்.

ஒரு புதினத்தைப் படித்ததும் அதன் நடையோ, நோக்குநிலையோ, மனத்தில் நிற்பதில்லை. பாத்திரங்களில் சில மறக்கமுடியாத நிலையில் அமையும். “நாவலில் பாத்திரங்கள் உயிர்நாடியாய் அமைகின்றன”[3] என்பர் க. கைலாசபதி.

படைப்பாளி சமுதாயக் கருத்துகளை விளக்க, கருத்துக்கு ஏற்பப் பாத்திரங்களைத் தோவு செய்வார். “சிறந்த புதினத்தில் படைக்கப் பெறும் பாத்திரங்கள் நம் உலகில் நம்மைப் போல் தலைநிமிர்ந்து நடப்பவர்களாயிருத்தல் வேண்டும். அவர்கள் ஒரு கற்பனைக் கதையில் தோன்றும் பாத்திரங்கள் என்பதை மறந்து நாம் அவர்களோடு அன்பு காட்டவும், வெறுப்புக் காட்டவும் கூடியவர்களாயிருத்தல் வேண்டும்”[4] என்று பேராசிரியா அ.ச.ஞானசம்பந்தன் கூறியுள்ளார்.

“செம்மையான புனைகதை ஒன்றின் அடித்தளம் பாத்திரத்தை படைத்தலே, மற்றையது எதுவும் இல்லை”[5] என்று பாத்திரப் படைப்பின் முதன்மையை டபிள்யூ ஜெ.ஹார்வி வலியுறுத்திக் கூறுகிறார்.

**பாத்திரப்படைப்பு முறைமை**

ஒரு நல்ல புதினத்தைப் படிக்கும்போது, அதில் வரும் கதைமாந்தர் நம்மோடு வாழும் மனிதர் போன்ற உணர்வை நமக்குள் எழுப்ப வேண்டும். அதைப் படித்து முடித்தபோது, நம்மோடு இதுவரை வாழ்ந்த நெருக்கமான உறவினர் எங்கோ பிரிந்து சென்றுவிட்டது போன்ற துயரமும் அதவும் நமக்குள் எழவேண்டும். அதுதான் சிறப்பானப் புதினம் என்று பேசப்படும். ஆல்லட் மிர்ரியம் என்ற அறிஞா, “ஒரு படைப்பாளனின் பாத்திர ஆக்கத்திறனே புதினத்தைப் படித்து முடித்த பின்னும், மனத்தில் ஏற்படுத்தும் பதிவுகளில் முதன்மை பெறுகின்றது”[6] என்று கூறுவது இங்குக் கருதத்தக்கது.

கதைகளில் பாத்திரங்களின் படைப்பே வெற்றியைத் தேடித்தரும் என்பர். ந.பிச்சமூர்த்தி, “புதினங்களில் வெற்றி, ஆசிரியர் தோர்ந்தெடுக்கும் பாத்திரங்களைப் பொறுத்தே அமைகிறது. கதைமாந்தர்கள் பெரும்பாலும் நடமாடும் மனிதர்களின் படப்பிடிப்பாகவும், அவர்களின் குண இயல்புகளில் தோர்ந்தெடுக்கும் சிறப்பியல்புகளைக் கொண்டவர்களாகவும் அமைய வேண்டும்”[7] என்பது பாத்திரப்படைப்பின் முறைமையைத் தெளிவுப்படுத்தும்.

நாளும் நாம் காணும் மனிதர்களிடம் நன்மை, தீமை இவையிரண்டு குணங்களும் இருக்கக் காண்கிறோம். கதையில் வரும் மனிதாகளும் இப்படி இருப்பதே இயல்புத் தன்மையைப் புலப்படுத்தும். நாடகப் பாத்திரங்களின் தனித்தன்மைகளை ஆராய்ந்த ஆய்வாளர், “பாத்திரப்படைப்பில் நன்மை, தீமை இவையிரண்டும் கலந்து அமைக்கப் பெறுதல் வேண்டும். ஒன்றை மட்டும் உரைப்பதாக இருப்பின், அப்பாத்திரம் சிறப்புற அமையாது”[8] என்னும் கருத்து, ஒரு பாத்திரப்படைப்பில் அதன் குணம், குற்றம் இரண்டும் சித்தரிக்கப்பட வேண்டும் என்ற உண்மையை வலியுறுத்தும்.

**தமிழ்ச்செல்வி புதினங்களில் பாத்திரங்கள்**

சு.தமிழ்ச்செல்வியின் ஐந்து புதினங்களில், தமிழகக் கிராமங்களில் வாழும் விவசாயப் பெருங்குடி மக்கள், கூலிவேலை செய்பவர்கள், சமூகத்தின் அடிமட்டத்தில் உழலும் உப்பளத் தொழிலாளாகள், மீனவர்கள், ஆலைத் தொழிலாளிகள் என்னும் உலகியலில் வாழும் மனிதாகளே பாத்திரங்களாக வருகின்றனர். இவர்களில், முன்மாதிரியாக எடுத்துக் கொள்ளத்தக்க இலட்சிய மாந்தரையும் பார்க்கிறோம்*f* இவர்களைப் போல நடந்து கொண்டால், துன்பம் தான் வரும் என்று பாடம் கற்றுக் கொள்ள வேண்டிய மாந்தர்களையும் சு.தமிழ்ச்செல்வி புதினங்களில் பார்க்க முடிகிறது. ஆண், பெண் இருபாலரும் பாத்திரங்களாக உலகியல் மனிதர்களைப் போலவே சித்தரிக்கப்பட்டுள்ளனர்.

இன்றைய இளைஞாகளுக்கு நினைவூட்ட வேண்டிய நாட்டின் பெண்ணடிமை நிலை பற்றிய குறிப்புகளையும், சமுதாய வழக்காறுகளையும் எடுத்துக் கூறும் பெண் பாத்திரச் சித்தரிப்பு சு.தமிழ்ச்செல்வியின் பாத்திரப்படைப்பில் குறிப்பிட்டுச் சொல்லத்தக்கதாக உள்ளது. பலதரப்பட்ட பெண் பாத்திரங்களைப் படைத்துக் காட்டிய சு.தமிழ்ச்செல்வி, சிறுவா பாத்திரங்களைச் சிறப்புறப் படைத்தளிக்கவில்லை எனலாம்.

**முதன்மைப் பாத்திரங்கள்**

கதையின் நாயகன் அல்லது நாயகி இவர்களுள் யார் கதை நிகழ்வுக்கு முதன்மைக் காரணியாக இருக்கிறாரோ அவரே முதன்மைப் பாத்திரம் எனப்படுவர்.

**மாணிக்கம் - மாணிக்கம்**

‘மாணிக்கம்’ புதினத்தின் கதைத் தலைவன் மாணிக்கம், இளமைப்பருவத்தில் மருத்துவத்திற்குப் படித்துவிட்டு, தனியாக மருத்துவமனை வைத்து தொழில் செய்து வருகிறான். விவசாய குடும்பத்தில் பிறந்த அவன் அவ்வப்போது விவசாய வேலைகளையும் செய்து வருகிறான். மாணிக்கத்திடம் எந்தவித கெட்ட குணமோ, தீய பழக்கங்களோ கிடையாது என்று கதைத் தொடக்கத்தில் கூறிய ஆசிரியர், பின்னர் அனைத்துக் கெட்ட குணங்களையும் உடையவனாக மாறுகிறான் என்றும் கூறுகிறார். தான் காதலித்த சக்குபாயைத் திருமணம் செய்து கொள்ள அவன் தாய் சம்மதிக்கவில்லை என்ற விரக்தியில் குடிப்பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்கிறான் மாணிக்கம். அதனைத் தொடாந்து சீட்டாட்டப் பழக்கமும் ஏற்படுகிறது. சுயநலம், அன்பு, சாகச உணர்வு, மூர்க்கம் இவற்றின் கலவையாக மாணிக்கம் திகழ்கிறான். பல திறமைகளைக் கொண்டிருக்கும் மாணிக்கம், முதலில் சக்குபாயைத் திருமணம் செய்து கொள்வேன் என்று உறுதியளிப்பதும், பின் தாயின் சொல்லுக்குக் கட்டுப்பட்டு செல்லாயியைத் திருமணம் செய்து

கொள்வதும், அதன்பிறகு சக்குபாயை இரண்டாவது திருமணம் செய்து கொள்ள மனைவியான செல்லாயியிடமே சம்மதம் கேட்பதுமாக முன்னுக்குப்பின் முரணான சிந்தனைகளைக் கொண்டவனாக இருப்பதும் கதைத் தலைவனுக்கான சிறப்பம்சமாகக் கருதப்பட முடியவில்லை.

அதே போன்று, ஒரே தொழிலில் நிலைத்திருக்க முடியாமல், சைக்கிள் வித்தை காட்டுவது, உழவுத்தொழில் செய்வது, மீன்பிடித்தொழில் செய்வது, மருத்துவத் தொழில் செய்வது என மனம்போன போக்கில் பல்வேறு தொழில்களை மாறி மாறிச் செய்து கொண்டிருக்கிறான் மாணிக்கம். உளவியல் ரிதியாக அவனுக்குள் நிகழும் மாற்றம், தகுந்த காரணப் பின்னணியுடன் உணாத்தப்படாததால், பாத்திரப் பண்பில் 'திடாத்தாவுதல்' நிகழ்ந்து இயல்புத் தன்மையைச் சிதைக்கிறது.

பாத்திரம் ஒன்று, நூலின் தொடக்கத்திலிருந்து முடிவுவரை நிலைத்தத் தன்மை மாறாமல் செயலாற்றலாம். அல்லது புரட்சிகரமான மாற்றத்திற்கு உட்படலாம். ஆனால் இவ்விரு நிலைகளிலும் அதன் பாத்திரத்தன்மை ஒரே சீராக அமைதல் வேண்டும். மாணிக்கம் பாத்திரத்தின் தன்மை இருநிலைகளிலும் ஒரே சீராக அமையவில்லை. சு.தமிழ்ச்செல்விக்கு இது முதல் புதினம் என்பதால், இந்தக்குறை காணப்படுகிறது.

இருப்பினும் தலைமைப்பாத்திரமான மாணிக்கம், புதினத்தின் இறுதியில் தன் இறப்பு மற்றவர்களுக்குப் பயன்படும் வகையில் அமைய வேண்டும் என்று கருதுவதாக ஆசிரியர் சுட்டிக்காட்டுகிறார். அதற்காகத் தான் கடலுக்குள் சென்று இறந்தால், தன் மகனுக்கு அரசின் உதவிப் பணம் கிடைக்கும் என்றும், அதைவைத்துக் கொண்டு தன் மகன் தொழில் தொடங்கி தன் வாழ்க்கையை சீரமைத்துக் கொள்வான் என்றும் கருதி, தன் உயிரைத் தானே மாய்த்துக் கொள்வதுமாகக் காட்டுவது ஒரு தலைமைப் பாத்திரத்திற்குரிய புரட்சிகரமான மாற்றமாக உணரமுடிகிறது.

**அளம் - சுந்தராம்பாள்**

'அளம்' புதினத்தின் தலைமைப் பாத்திரம் சுந்தராம்பாள் என்னும் பெண் பாத்திரம். வரிசையாக மூன்று பெண் குழந்தைகளைப் பெற்றெடுத்த சுந்தராம்பாளின் கணவன் சுப்பையன். பொருள் தேட வெளிநாடு சென்ற கணவன் இறுதிவரை திரும்பாத நிலையில் தனது மூன்று பெண் குழந்தைகளுடன் வாழ்வை எதிர்கொள்கிறாள் சுந்தராம்பாள். அவளுடைய மூன்று பெண்களும் அட்டக் கருப்பாய் காட்சியளித்தனர். சுந்தராம்பாள் தன் மகள்களைக் கட்டிக் கொடுக்க முடியாமல் தவிக்கிறாள். வயிற்றுக் கொடுமையில் இருந்து தப்பிப்பதற்காக அடுத்த வீட்டுக் கொல்லைகளில் வேலை செய்வது, தண்ணீர் பாய்ச்சுவது, புகையிலைக் கன்று நடுவது என்று பல்வேறு கூலி வேலைகளுக்கும் தன் மகள்களை அழைத்துச் செல்கிறாள். இயற்கையின் சீற்றத்திற்கு ஆளாகிய நேரத்தில் அந்த வேலைகளும் இல்லாமல் போய்விடுகின்றன. வறுமையின் கொடுமையில் வாடினாள் சுந்தராம்பாள். தனக்கும் தன் பிள்ளைகளுக்கும் உண்பதற்கு உணவு இல்லாமல் திண்டாடினாள். வேறு வழியில்லாமல் காரக் கொட்டி கிழங்கையும், மின்னிக் கிழங்குகளையும் சுட்டும், அவித்தும் தன் பிள்ளைகளுக்குக் கொடுத்தாள். இதனை,

"சின்னமகள் கொண்டு வந்து கொடுத்தக் காரக்கொட்டிக் கிழங்கை வெட்டி அலசினாள். உரலில் போட்டு இடித்தாள். வெள்ளையாய் மாவுபோல் வந்தது கிழங்கு. சொதசொதவென்றிருந்த மாவை உரலிலிருந்து அள்ளினாள். கையெல்லாம் ஒரே அரிப்பெடுத்தது. அரிப்பு தாங்க முடியவில்லை. உடலில் மாவுபட்ட இடமெல்லாம் அரித்துத் தின்றது. நிறைய புளியைக் கரைத்து ஊற்றி களியாகக் கிண்டினாள். புளியால் காரல் குறைந்தது. பிள்ளைகளுக்கும் கொடுத்துவிட்டு தானும் தின்றாள். அன்றிலிருந்து காரக் கொட்டிக் கிழங்கைத் தேடியும் ஊரை ஒருமுறை சுற்றி வந்தார்கள் அஞ்சம்மாளும் ராசாம்பாளும். தாழங்காடுகளில் மின்னிக் கொடியும் படர்ந்து கிடந்தது. மின்னிக் கொடியின் வேரில் கிழங்கிருப்பதைப் பார்த்துவிட்டு பிடுங்கினாள் அஞ்சம்மாள். கட்டை விரலளவு கிழங்குகள் வேரிலிருந்தன. வாயில் வைத்து லேசாய் கடித்துப் பார்த்தாள், காரலடித்தது. திங்கலாமென்று மடிநிறைய மின்னிக் கிழங்குகளை பிடுங்கிக் கொண்டு வந்தாள்.

மின்னிக் கிழங்குகளைச் சுட்டும் அவித்தும் தின்றார்கள். ஒவ்வொரு நாளையும் இப்படி காடுகரையில் கிடப்பதைத் தின்றே ஓட்டினார்கள். தினமும் அக்கம் பக்கத்து சனங்களுக்குத் தெரியாமல் காட்டில் கிடக்கும் காரக்கொட்டிக் கிழங்கையும், மின்னிக் கிழங்கையும் பிள்ளைகளுக்குக் கொடுத்துவிட்டு வெகுநேரம் வரை தனியாய் உட்கார்ந்து அழுதுகொண்டிருப்பாள் சுந்தராம்பாள். அவள் வேண்டாத தெய்வமில்லை. எந்தத் தெய்வம் அவள் கணவனை அவளிடம் கொண்டுவந்து சேர்க்கப் போகிறது? இந்த மூணு புள்ளைவொளயும்

வச்சிக்கிட்டு அரவயத்துக் கஞ்சிக்கு அல்லாடுறனே கடவுளே..... ஒனக்கு கண்ணேயில்லயா? ஓங்கண்ணு அவிஞ்சி பெயிட்டா? யாம்புள்ளைவொள நான் எப்படி கரசேக்கப் போறனோத் தெரியலையே. போன ஆம்புள என்ன ஆனாவோன்னு ஒண்ணுந்தெரியாம தெவச்சி நிக்கிறனே. பன்னண்டு வருசமா பரிதவிச்சி நிக்கிறனே. என்ன கண்கொண்டு பாக்க இந்த வூருல ஒரு தெய்வமும் கெடயாதா. நொண்டிவீரன் ஆவுத்தி காத்தானெல்லாஞ் செத்துப் பெயிட்டியளா? என்று எதையெதையெல்லாமோ நினைத்துக் கலங்குவாள்”[9] என்று ஆசிரியா கூறுவதிலிருந்து அவளுடைய வறுமை நிலையை அறியமுடிகிறது.

**கற்றாழை - மணிமேகலை**

‘கற்றாழை’ புதினத்தின் தலைமைப் பாத்திரமான மணிமேகலை, சிறு வயதிலேயே படிப்பின் மீது மிகுந்த ஆர்வம் கொண்டவளாக இருக்கிறாள். ஆனால் அவளுடைய தந்தை சண்முகம், சாராயக்கடையில் அமாந்து கொண்டு டபசும் மற்றவர்களின் பேச்சைக் கேட்டுக் கொண்டு மணிமேகலையின் படிப்பைப் பாதியிலேயே நிறுத்திவிடுகிறான். வேறு வழியில்லாமல் மணிமேகலை, மாடுகளுக்கு புல் அறுக்கச் செல்வது, சாணம் அள்ளுவது, ராட்டி தட்டுவது, விறகு வெட்டுவது, கீற்று முடைவது போன்ற வீட்டு வேலைகளைச் செய்து வருகிறாள். இந்நிலையில் சீட்டாட்டம், குடிப்பழக்கம், பெண்கள் சகவாசம் போன்ற அனைத்துக் கெட்டப் பழக்கங்களையும் உடைய செல்வராசுவிற்கு மணிமேகலையைக் கட்டி வைக்கிறார்கள். செல்வராசு திருமணத்திற்குப் பிறகும் அப்பழக்கங்களைத் தொடாகிறான். இதனைத் தெரிந்தும், தெரியாதது போல் இருந்து விடுகிறாள் மணிமேகலை. குடும்பத்தின் எந்தவித பொறுப்பையும் ஏற்றுக் கொள்ளாத செல்வராசுவிற்கு, காலையிலேயே பீடி வாங்கி வைத்துவிட்டு அடுத்த ஊருக்கு வேலைக்குச் செல்கிறாள் மணிமேகலை. கணவனின் அனைத்துக் கொடுமைகளையும் தாங்கிக் கொள்பவளாகவும், தன் துயரங்களை யாருடனும் பகீர்ந்துகொள்ள விரும்பாதவளாகவும், தன்னுடைய வாழ்க்கையைத் தானே சரிசெய்து கொள்ளவேண்டும் என்ற துடிப்பு மிக்கவளாகவும் மணிமேகலை என்ற இப்பாத்திரம் அமைந்துள்ளது.

தன்னுடைய படிப்புதான் பாதியிலேயே நின்றுவிட்டது. தன் தங்கை வளாமதியின் படிப்புக்கும் தடைஏதும் ஏற்பட்டுவிடக் கூடாது என்ற உயாந்த எண்ணத்தை உடையவளாக இருந்தாள் மணிமேகலை. வளாமதியை எப்படியாவது படிக்க வைத்துவிட வேண்டும் என்பதில் உறுதியாயிருந்தாள். இதனை,

சின்ன மொட்ட.

என்னக்கா?

என்னமேரி நீயும் ஆயிடக்கொடாது. நீ நல்லா படிச்சிக்க. இடுமானத்துல படிச்சா எப்ப வேணுமுன்னாலும் நெறுத்திப்புடுவாவோ. அதுனாலதான் சொல்லறன்.

வேற எங்கக்கா படிக்கிற?

நம்ம சின்னத்த மவ குருகுலத்துல படிச்சிப்புட்டு இப்ப அங்கயே

வேல பாக்குதாம். அது மேரி நீனும் அங்கபோயி சேந்து படிச்சிக்க.

எப்புடிக்கா போயிச்சேருற?

நா அப்பாகிட்டச் சொல்லி ஒன்னய அங்க சேத்துவுடச் சொல்லுறன்.

சேரிக்கா.

மணிமேகலைக்குத் தன்னுடைய தங்கையை எப்படியாவது படிக்க வைத்துவிட வேண்டும் என்று தோன்றியது. அதற்காகப் பலமுறை தன்னுடைய அப்பா சண்முகத்திடம் பேசினாள். சேர்க்கும் செலவுக்கு தன் தாலிக்குண்டு இரண்டையும் தருவதாகச் சொல்லிய பிறகு வேறு வழியில்லாமல் சண்முகம் ஒத்துக் கொண்டான். காலாண்டுத் தேர்வு முடிந்து போயிருந்த போதும் மறுப்பேதும் சொல்லாமல் குருகுலத்தில் வளாமதியைச் சோத்துக் கொண்டார்கள்.

மணிமேகலைக்கு நிம்மதியாயிருந்தது. நான் உடம்பு முடியாமல் வந்திருந்த இந்த இருபது இருபத்தைந்து நாட்களுக்குள் இப்படியொரு நல்ல காரியத்தை நடக்க வைத்துவிட்டோமே என்று நினைத்து தன் மீதே பெருமைபட்டுக் கொண்டாள்”10 என்று ஆசிரியா கூறுவதிலிருந்து அவளுடைய உயாந்த எண்ணத்தை உணரமுடிகிறது. அதே போன்று தன் மகள் சத்யாவின் படிப்பும் தொடர வண்டும் என்று

நினைத்த மணிமேகலை, கும்பகோணத்தில் இருக்கும் தனது தங்கை வளாரமதியின் வீட்டிற்குப் படிப்பதற்காக அனுப்பிவிடுகிறாள்.

**கீதாரி ராமு**

'கீதாரி' புதினத்தின் தலைமைப் பாத்திரமான ராமுகீதாரி, உழைப்பை நேசிக்கும் உயிர்ப்புடன் படைக்கப்பட்டுள்ளார். மழை, வெயில் என்று பாராமல் பொழுதெல்லாம் ஆடு மேய்ப்பதும், ஆட்டுக்கிடைகளை வயல்களில் 'பட்டி' போடுவதுமே தன் வாழ்க்கையாகக் கழித்து வருபவர் ராமுகீதாரி. தள்ளாத வயதிலும் ஆடுகளை மேய்த்து வாழ முடியும் என்ற மனதிட்பம் கொண்டவராகவும், தலைமைப் பாத்திரத்திற்குரிய அனைத்துப் பண்புகளையும் உடையவராகவும் ராமுகீதாரி புதினத்தில் வலம் வருகிறார். அடைக்கலமற்ற பைத்தியக்காரப் பெண்ணுக்கு இரட்டைப் பிரசவம் பார்ப்பது, அக்குழந்தைகளைத் தத்தெடுத்து வளாக்க யாரும் முன்வராத போது குழந்தைகளைத் தானே வளாக்கத் துணிவது, யாரோ பெற்ற பிள்ளைகளான வெள்ளைச் சாமியையும், அவனது அண்ணனையும் பண்ணையாருக்குத் தெரியாமல் காப்பாற்றித் தூக்கிக் கொண்டு வருவது, வெள்ளைச்சாமிக்கு ஆடு மேய்த்த கூலியாக தனியாக ஆடு பிரித்துக் கொடுப்பது, வெள்ளைச்சாமி, கரிச்சா இருவருக்கும் திருமணம் செய்துவைப்பது, வெள்ளைச்சாமி கரிச்சாவைப் பிரிந்தபோது கரிச்சாவுக்குத் துணையாய் இருந்து அவளுடைய குழந்தையை நன்றாகப் பார்த்துக் கொள்வது, கரிச்சா இறந்து போன பின்பும் குழந்தையை வெள்ளைச்சாமியிடம் கொடுக்காமல் தானே வளாதத்துக் கொள்ள நினைப்பது, வயற்காரர்களிடம் ஆடு மேய்க்கும் இடையாகளுக்காகப் பரிந்து பேசுவது, அண்ணன் இறந்த பின்பு அவனது மனைவியைத் திருமணம் செய்து கொள்ள மறுக்கும் தம்பியிடம், திருமணம் செய்து கொள்ள நாட்டாமை பண்ணுவது போன்ற அனைத்துத் தலைமைப் பண்புகளையும் ராமுகீதாரி என்ற பாத்திரம் ஏற்றுக் கொண்டுள்ளது. ஆறு வயது முதல் வெள்ளைச்சாமியை ஆடு மேய்க்க அழைத்துக் கொண்டு போனார் ராமுகீதாரி. அவனுக்குக் கூலியாக ஒவ்வொரு வருடமும் இரண்டிரண்டு ஆடுகளை அவனுக்கென்று ஒதுக்கிவிட்டார்.

"இந்தாடா வெள்ளச்சாமி ஒனக்கு இந்த ரெண்டு ஆடுகளும் இது போடுற குட்டிகளும் இனிமே ஒனக்குத் தாண்டா சொந்தம் என்று சொல்லி ஏதாவதொரு நல்ல நாளில் அவன் கையில் ஆட்டை ஒட்டிக் கொடுப்பார் ராமு." (ப. 42) இத்தகைய உயர்ந்த பண்பினைக் கொண்ட மனிதராக ராமுகீதாரி உயிர்ப்புடன் சித்தரிக்கப்பட்டுள்ளார்.

"ஒரு படைப்பை ஆரம்பம் முதல் கடைசி வரை நமது இதயத்திற்கு ஏற்றிக் கொண்டு செல்லும் அழகுக் கரங்களாகச் செயல்படுவது கதைப் பாத்திரங்களாகும்"[11] என்ற கருத்தினை ராமு என்ற பாத்திரம் மெய்ப்பிக்கிறது.

**ஆறுகாட்டுத்துறை - சமுத்திரவல்லி**

'ஆறுகாட்டுத்துறை' புதினத்தின் தலைமைப் பாத்திரமான சமுத்திரவல்லி, ஆறுகாட்டுத்துறை என்னும் ஊருக்கே நாட்டாராக இருக்கக் கூடிய சிங்காரவேலு நாட்டாரின் மகளாவாள். ஊராரால் மதிக்கப்படுபவள். சமுத்திரவல்லி எதிரே வருவதைக்கூட ஊர்மக்கள் நல்ல சகுனமாகக் கருதினர்.

"நாட்டாரு மக நாச்சியாவ பாத்துட்டுப் போனா அத்தனையும் அமோகமா இருக்குமுல்ல"(63) என்று மீனவப்பெண் தனுசம்மா வாயிலாக ஆசிரியா கூறியிருப்பது தலைமைப் பாத்திரத்தின் சிறப்பினை எடுத்துரைக்கிறது. அத்தகைய மதிப்பும் சிறப்பும் உடைய சமுத்திரவல்லி சாமுவேல் மீது காதல் கொள்கிறாள். அவனைத் திருமணம் செய்து கொண்டால் ஊர் மக்களும், நாட்டாரும் தன்னை ஊரைவிட்டு ஒதுக்கி வைத்துவிடுவார்கள் என்று தெரிந்தும் அவனைத் திருமணம் செய்து கொள்வதில் உறுதியாயிருக்கிறாள். ஆனால் சாமுவேல் அந்த அளவுக்கு சமுத்திரவல்லி மீது காதல் கொண்டவனாக இல்லை. அவளைத் திருமணம் செய்து கொண்டாலும், அவள் தன்னைத் திருமணம் செய்து கொண்டமுறை அவனுக்குப் பிடிக்கவில்லை. சமுத்திரவல்லியால் தான், தாம் ஊராராலும், நாட்டாராலும் ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கிறோம் என்று நினைத்து அவளிடம் வெறுப்புடன் நடந்து கொள்கிறான்.

அவள் மீது கொண்டுள்ள இந்த வெறுப்பு பிறக்கப்போகும் பெண் குழந்தை மீதும் ஏற்படுகிறது. இதனை சாமுவேல், சமுத்திரவல்லி உரையாடல் வழியாக ஆசிரியர் புலப்படுத்துகிறார்.

'என்ன மேரியே இன்னொரு உசுரு, இப்பயே அவனப் பாக்கணும் போல இருக்கு சமுத்திரவல்லி'

'ரொம்ப ஆசய வளத்துக்கிடாதிய எனக்கு வல்லாங்கையி பக்கத்துலதான் தலமுட்டுற மேரி இருக்கு.'

'நீ என்ன சொல்லுற?'

'பொறக்கப் போறது பொம்புள புள்ள மேரிதான் இருக்கு' சமுத்திரவல்லி சொல்லி முடிப்பதற்குள் உரித்து வைத்திருந்த பூரி பொட்டலத்தை தூர எத்திவிட்டு சடாரென்று எழுந்தான். முகம் கோபத்தில் துடித்தது.

'யாருக்கு வேணும் பொம்புளப்புள்ள? பொம்புளப்புள்ளையா மட்டும் பொறந்துச்சின்னு வச்சிக்க எனக்கு கெட்ட கோவம் வந்துடும் ஆமா.'

'ஆணாருந்தான்ன பெண்ணாருந்தான்ன? அது ஒங்க புள்ளதான?'

'அது எப்புடி? ஆணா பொறந்தாத்தான் என்ன மாதிரி இருக்கும்'

'பொண்ணா பொறந்தா?'

'ஒன்ன மாதிரிதான் பொறக்கும்'

'என்ன மாதிரி பொறக்கக் கூடாதா?'

'நாட்டாரு மாதிரி நானும் மானங்கெட்டு நிக்கணுமுன்னு ஆசப்படுறியா?'

சமுத்திரவல்லி தன் தலையில் இடி இறங்கியதைப் போல உணாந்தாள். தொண்டை அடைத்துக் கொண்டது. அவளால் பேச முடியவில்லை. கண்களை முட்டிக்கொண்டு கண்ணார் வந்தது.

வாயில் வைத்திருந்த உணவு வேம்பாக கசந்தது, உள்ளுக்குள் விழுங்க முடியவில்லை. வெளியே துப்பவும் முடியவில்லை. இதுவரை நெருஞ்சிமுள்ளை தின்று விட்டவளைப் போல திக்கு முக்காடினாள். விழுங்கிய முள் அனைத்தும் வயிரெங்கும் குத்திக் கிழிப்பது போலிருந்தது. திணறினாள் அவள்.

'ஒன்னய குத்தம் சொல்லுறனேன்னு நெனக்காத, ஆனா ஒன்னமேரி ஒரு பொண்ணு நம்மளுக்கு வேண்டாம்' மென்று முழுங்கியவளாக மெதுவாகக் கேட்டாள்.

'நாம் பண்ணுனது தப்புங்குறியளா?'

'பின்ன இல்லயா? நாட்டாருக்கு ஒன்னால எவ்வள பெரிய தலக்குனிவு. நான் மட்டும் நாட்டாரு எடத்துல இருந்துருந்தன்னா ஒன்னய வெட்டி கடலுல விட்டுருப்பன்'

'ஒங்களுக்காவத்தான் நான் அப்படி செஞ்சன். நீங்களே இப்படி பேசலாமா?'

'நான் ஒன்னய வீட்டவுட்டு வுடியாறச் சொன்னனா? இல்ல யாங்கூட வந்து ஒறவாடுன்னுதான் கையப் புடிச்சி இழுத்தனா?'

அதார்ச்சியாலும் அவமானத்தினாலும் குறுகிப்போய் நின்றாள் சமுத்திரவல்லி.

'நீனா தானே வலியனா வந்து என்னகிட்ட பேசுன, பழகுன?'

'ஒங்களுக்குப் புடிக்கலன்னா மறுத்துருக்க வேண்டியதுதான? அப்ப ஏன் மறுக்கல'

'இந்த மாதிரியெல்லாம் ஊரு என்னய ஒதுக்கி வச்சிருமுன்னு தெரிஞ்சிருந்தா நான் மறுத்துதான் இருப்பன்'.

'அப்ப என்னய புடிக்காமயேத்தான் ஏத்துக்கிட்டியளா?'

'ஒன்னய புடிக்கலன்னு இப்ப யாரு சொன்னா? ஒன்னோட நடப்புதான் புடிக்கல'

'அதுக்கு இப்ப என்ன செய்யலாங்குறிய?'

'ஒண்ணும் செய்யாண்டாம். நீ பொம்புளப் புள்ளய மாத்திரம் பெத்துரக் கூடாது"12 என்று கூறுகிறான். அதே போன்று தனக்குப் பெண்பிள்ளை பிறந்தால் உன்னைப் போன்று ஒழுக்கமில்லாமல் தான் பிறக்கும் என்று கூறா அவளை கலங்கடிப்பதோடு பிறந்த பெண் குழந்தையின் முகத்தைக்கூடப் பார்க்காமல் கட்டுமரத்தை எடுத்துக்கொண்டு கடலுக்குச் சென்று விடுகிறான்.

நான்கு வருடமாகியும் சாமுவேல் திரும்பி வராததால் சாமுவேலின் தம்பி அருள்தாசின் விருப்பத்திற்கிணங்க சிங்காரவேலு நாட்டார், சமுத்திரவல்லி - அருள்தாசு திருமணத்தை நடத்தி வைக்கிறார். அருள்தாசை இரண்டாம் திருமணம் புரிந்த சமுத்திரவல்லி ஒரு ஆண் குழந்தையைப் பெற்றெடுக்கிறாள். இச்சூழ்நிலையில் கச்சத்தீவில் சிக்கித் தவித்த சாமுவேல் ஆறுவருடங்கள் கழித்து தன் தவறை உணர்ந்து

மீண்டும் ஆறுகாட்டுத்துறைக்கு வருகிறான். தன் மனைவியும், தன் தம்பியும் தனக்கு செய்த துரோகத்தைத் தாங்கிக் கொள்ள முடியாத சாமுவேல் சமுத்திரவல்லியைக் கடலில் தள்ளிக் கொல்லத் துணிகிறான்.

எந்தத் தவறையும் அறிந்து செய்யாத சமுத்திரவல்லி கடல் தாயின் கருணையினால் காப்பாற்றப்படுகிறாள். கடலில் இருக்கும் நா அதன் அலைகளுக்கு இடையில் சிக்கித் தவிப்பதுபோல் இப்புதினத்தின் தலைமைப் பாத்திரமான சமுத்திரவல்லியும் தன் வாழ்க்கைக் கடலில் சிக்கித் தவிப்பதாக ஆசிரியர் காட்டுவது இயல்பானதாக இருக்கிறது.

**முடிவுரை**

பெண் பாத்திரச் சித்தரிப்பு சு.தமிழ்ச்செல்வியின் பாத்திரப் படைப்பில் குறிப்பிட்டுச் சொல்லத்தக்கதாக உள்ளது. தமது புதினங்களில் பலதரப்பட்ட பெண் பாத்திரங்களைப் படைத்துள்ள ஆசிரியர் சிறுவர் பாத்திரங்களைச் சிறப்புறப் படைத்தளிக்கவில்லை.

கதையின் நாயகன் அல்லது நாயகி இவர்களுள் யார் கதை நிகழ்வுக்கு முதன்மைக் காரணியாக இருக்கிறாரோ அவரே முதன்மைப் பாத்திரம் எனப்படுவர். சு.தமிழ்ச்செல்வியின் படைப்புகளில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட ஐந்து புதினங்களில் இரண்டு புதினங்கள் மட்டுமே ஆண்கள் தலைமைப் பாத்திரமாகப் படைக்கப்பட்டுள்ளனர். ஏனைய புதினங்களில் பெண்களே தலைமைப் பாத்திரங்களாக உள்ளனர்.

உலகியலில் சிறந்த பண்புடன் வாழும் மனிதர்களின் வார்ப்பாகப் படைத்துக் காட்டும் மாந்தர்கள் சிறப்புநிலைப் பாத்திரங்கள். கருத்து விளக்கம் தருவதற்காகப் புதின ஆசிரியர் தம்மையே ஒரு பாத்திரமாகப் படைத்துக் காட்டுவது இவ்வகைச்சிறப்பு நிலைப் பாத்திரம். ‘கற்றாழை’ புதினத்தில் வரும் வளர்மதி, ‘அளம்’ புதினத்தில் வரும் கணேசன், ‘ஆறுகாட்டுத்துறை’ புதினத்தில் வரும் சிங்காரவேலு நாட்டார் போன்றோர் இவ்வகையில் சுட்டத்தக்க பாத்திரங்கள் ஆவர்.

**சான்றெண் விளக்கம்**

1. இரா.மோகன், டாக்டர் மு.வ.வின் நாவல்கள், ப. 57.
2. Walter Allen, The English Novel, p. 16.
3. க. கைலாசபதி, தில்லி, தமிழ்ச்சங்க வெள்ளிவிழா மலர், ப. 39.
4. அ.ச. ஞானசம்பந்தன், இலக்கியக்கலை, ப. 316.
5. W.J. Harvey, Characters and the Novel, p. 6.
6. Allot Mirriam, Novelists on the Novel, Routledge and Kegan Paul, London, p. 201
7. ந. பிச்சமூர்த்தி திறனாய்வும் தமிழ் இலக்கியக் கொள்கையும், ப. 227.
8. வி. வில்வராணி, மதுரை நிஜ நாடக இயக்கத்தின் நாடகங்கள், (1978-2004), முனைவர் பட்ட ஆய்வேடு, மதுரை காமராசர் பலகலைக்கழகம், மதுரை, ப. 186.
9. சு. தமிழ்ச்செல்வி, அளம், பக். 114-115.
10. சு. தமிழ்ச்செல்வி, கற்றாழை, பக். 161-162
11. பொன்மணி வைரமுத்து, இலக்கிய விமர்சனச் சிந்தனைகள், ப. 72.
12. சு. தமிழ்ச்செல்வி, ஆறுகாட்டுத்துறை, பக். 150-152.

**துணைநின்ற நூல்கள்**

13. சு. தமிழ்ச்செல்வி, ‘மாணிக்கம்’, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை-98, 2007.
14. சு. தமிழ்ச்செல்வி, ‘அளம்’, மருதா, சென்னை-14, 2002.
15. சு. தமிழ்ச்செல்வி, ‘கீதாரி’, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை-98, 2008.
16. சு. தமிழ்ச்செல்வி, ‘கற்றாழை’, மருதா, சென்னை-14, 2005.